அண்ணா அறுபது

புலவர் அ.நக்கீரன்

C.S mani

XA.266

அண்ணா அறுபது

புலவர். அ. நக்கீரன்

வெளியீடு :

நன்னன் நிலையம்

520, திருவல்லிக்கேணி நெடுஞ்சாலை,

சென்னை-5.

முதற் பதிப்பு: நவம்பர், 1968.

விலை 60 காசு.

அச்சிட்டோர்: ஜீவன் அச்சகம், சென்னை-5. (1370)

படையல்

பெற்று வளர்த்துப் பிணிபோக்கிப் பின்னுளில்
கற்கவைத்துக் காவற் சிறைகாத்து - நிற்பதனுல்
எந்தையும் யாயு மெனக்கிறை யிந்நூலைத்
தந்தேன் படையலெனத் தான்.

தமிழகப் பொதுப்பணித் துறை அமைச்சர்
மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி அவர்களின்

அணிந்துரை

புலவர் நக்கீரன் [illegible]
'[illegible]' [illegible]
[illegible]
[illegible]
'[illegible]' [illegible]
[illegible]. [illegible]
"[illegible]!" '[illegible]'
[illegible]
[illegible]. புலவர் நக்கீரன் அவர்களின்
[illegible]
[illegible].

[illegible]
16/9/68

உசுமானியா பல்கலைக் கழகத் தமிழ்த்துறைத் தலைவர்
டாக்டர் சி. இலக்குவனார் எம். ஏ., எம் ஓ.எல்., பி. எச். டி.

அவர்களின் அணிந்துரை

புலவர் நக்கீரனார் யாத்துள்ள **'அண்ணா அறுபது'** எனும் இனிய நூலைப்படித்து மகிழ்ந்தேன்.

யாப்புக்களில் வெண்பாவே புலவர்களால் யாத்தற்கு அரியது என்பர். புலவர் நக்கீரனார் அவ்வெண்பா யாப்பில் அண்ணாவின் சீர்த்தியை அழகுறப் புனைந்துள்ளார். புலவர் நக்கீரனாரும் **'வெண்பாவில் புலி'** யாகிவிட்டார்.

பேரறிஞர் அண்ணாவின் பெரும்புகழ் இன்று உலக முழுவதும் பாராட்டப் பெறும் சூழ்நிலை தோன்றியுள்ளது. தமிழக ஆட்சியின் தலைமைப் பொறுப்பை ஏற்று, தமிழ்த் தாயை அரியணையில் அமர்த்தித் தமிழ் மக்களின் குறை களைக் களையும் முயற்சியில் அயர்ச்சியடையாது அல்லும் பகலும் ஆற்றிவரும் பணியால் மாற்றாரும் ஏற்றிப் புகழ் கின்றனர். பேரறிஞர் அண்ணாவும் பகை நட்பாக் கொண்டொழுகும் பண்பில் தலைசிறந்து விளங்குகின்றார். மக்களிற் சிறந்த மாமணியாய் விளங்கும் அண்ணாவின் வாழ்க்கை வரலாறு முழுவதும் தேன் பிலிற்றும் இனிய வெண்பாவில் வடித்துத் தந்துள்ள திறன் வியக்கத் தக்கது. சிறையில் வாடுங்காலத்தில் செந்தமிழ்த் தலைவரின் சீர்மிகு புகழைச் செந்தமிழ் வெண்பாவால் நந்தமிழர் போற்ற நல்கிய புலவர் நக்கீரனார் புலமைத் திறன் பாராட்டுதற்குரியது. "அண்ணா நூறு"ம் பாட அளப்பில் காலம் வாழ்வாராக. அண்ணா புகழ்போல் அன்பர் நக்கீரனார் புகழும் ஓங்குக புலமையுலகில். வாழ்க புலவர். வாழ்க அண்ணா.

ஐதராபாத்து.
17—7—68

சி. இலக்குவன்.

ஆக்கியோன் முன்னுரை

தமிழகச் சிறைகளில் உறையும் கவிஞர்களால் ஆக்கப்பட்ட 'சிறை தரும் தேன் கவிதை' என்னும் நூல் சென்னையில் நடைபெற்ற இரண்டாவது உலகத் தமிழ் மாநாட்டில் தமிழக உயர் நீதி மன்றத் தலைமை நீதிபதியவர்களால் வெளியிடப் பட்டதைத் தமிழ் கூறும் நல்லுலகம் நன்கறியும். சிறைகளில் அடைக்கப்பட்டு - ஒடுக்கப்பட்டுக் கிடந்தாலும் சிறைப்பட்டோரது சிறகடித்துப் பறக்கும் சிந்தனை உள்ளங்களை எதுவும் கட்டுப் படுத்தி வைக்க முடியாது என்பதற்கு அந்நூலே சான்று.

அண்ணா மணிவிழாவை முன்னிட்டுப் புதுவையிலிருந்து வெளியாகவிருக்கும் 'அண்ணா புகழ் நானூ'ற்றுக்குக் கவிதை வேண்டிச் சிறைக் கவிஞர்கட்கும் வேண்டுகோள் வந்தது. பல்வகைக் காரணங்களால் அந்நூலுக்குப் பாடல் அனுப்பி வைக்க என்னால் இயலாது போயிற்று. அதன் விளைவே இச்சிறு நூல்.

அண்ணாவின் வரலாற்றை இச்சிறு நூல் சுருங்கச் சொல்கிறது. இந்நூலை அண்ணாவின்

60-ஆம் பிறந்த நாளில் வெளியிட விழைந்தேன். அணிந்துரை விரைவில் கிடைக்காத காரணத்தால் பின்னுல் வெளியிட நேர்ந்தது.

எத்துணையோ அலுவல்களிருந்தும் தம் பொன்னுன நேரத்தில் சிறிது ஒதுக்கி அணிந்துரை தந்துதவிய தமிழகப் பொதுப்பணித் துறை அமைச்சர் மாண்புமிகு கலைஞர் மு. கருணுநிதி அவர்கட்கும், நூலில் திருத்தஞ் செய்து செப்பனிட்ட நாவலர் ந. மு. வே. நாட்டாரின் இளவல் திரு ந. மு. கோவிந்தராய நாட்டார், கெழுதகை நண்பர் புலவர் மீ. தங்கவேலனுர் ஆகிய இருவர்க்கும். நன்முறையில் அச்சிட்டுத் தந்த அச்சகத்தாருக்கும் என் உளங்கனிந்த நன்றி.

அமெரிக்காவில் வெற்றியுடன் அறுவைச் சிகிச்சை பெற்று, அண்ணு நலம் பெற்றுத் திரும்புகிருர். தாயக மண்ணில் திருவடி பதிக்கும் பொன்னுன இந்நன்னுளில் தமிழகத் தம்பிகளின் கைகளில் இச்சிறு நூலைத் தவழ விடுகிறேன்.

அன்பன்,

அ. நக்கீரன்.

தமிழன்னை

"அண்ணா வறுப" தறிவிற் சிறியேன்யான்
வெண்பாவிற் பாட விழைந்திட்டேன் - தண்டமிழ்
அன்னாய் ! அருள்கூர்ந் தழகா யதுமுடிய
முன்போந்து காக்க முனை.

அவையடக்கம்

செங்கீர்ப் பருவச் சிறுகுழவி யின்மழலை
அன்னைதந் தைக்கோ ரருமருந்தாம் - செந்தமிழ்ச்
சான்றோர் பொறுப்பரெனுந் தன்மையால் நக்கீரன்
தோன்றிய வண்ணஞ் சொன்னேன்.

நூல்

1

கலைநிற்குங் காஞ்சியுயர் கல்வியில் வல்லார்
நிலைநிற்குங் காஞ்சி நினைந்து - அலைவோர்
குறைதீர்க்குங் காஞ்சிகுன் ருக்கோயிற் காஞ்சி
மறைபோற்றுங் காஞ்சி மதி.

2

நடராசன் பங்காரு நற்றவங்கள் செய்யக்
குடமுனிவன் தோற்றம்போற் கூடி - மடமகற்றும்
கற்ருர் தொகைமல்கு காஞ்சியில் அண்ணுவாய்க்
குற்றமறத் தோன்றிஞன் கூவு.

3

சௌமிய வாண்டில் தமிழ்த்தாயின் மூத்தமகன்
பௌவ வுலகிற் படிந்திட்ட - கௌவை
அகற்றப் பிறந்ததனுல் அன்னையொடு மற்ருேர்
மகிழ்ச்சிமிகக் கொண்டார் மனத்து.

4

சிற்றன்னை 'தொத்தா' சிறப்பாய் வளர்த்துவக்கப்
பெற்ருர்நம் அண்ணு பெருங்குணங்கள்-கற்றற்கு
பச்சையப்ப வள்ளல்தம பள்ளி நுழைந்துகலை
இச்சையுடன் கற்ரு ரினிது.

5

சீட்டாட்டம் வட்டாட்டஞ் சேர விளையாடிக்
கேட்டார்ப் பிணித்துமற்றுக் கேளாரும் - வேட்ப
அடுக்கு மொழியி லழகா யுரைசெய்வார்
நடுக்கற்ற காட்சியண் ணா.

6

பொடிவைத்துப் பேசுதலும் பேசுங்கால் நாசிப்
பொடிவைத்துக் கொண்டும் பொதுவில் -
நடிப்பதிலும்
மையிட் டெழுதுதலில் மன்னர்தாம் மையுடையார்
கையொடுங்கச் செய்வார் கடிது.

7

காஞ்சி நகராள் கழக வெழுத்தராய்த்
தீஞ்சொற்சே ரண்ணா செயல்புரிந்தார் -
காஞ்சிவிட்டுச்
சென்னை முதுகலை தேறியபின் சின்னாட்கள்
இன்னாசா னானா ரினிது.

8

மூவேழா மாண்டில் முனைந்துகல் லூரியில்நம்
நாவேந்தர் பல்கலைகள் நாடுங்கால்-பாவையர்க்குக்
காளையாம் அண்ணா கழுத்தில் இராணி யம்மை
மாலை யணிந்தார் மகிழ்ந்து.

9

மனைத்தக்க மாண்புடைய ளாகிக் கொழுநன்
வினைவிளக்கும் வாழ்க்கைத் துணைவி -
தனைவிரும்பும்
அண்ணாவுக் கேற்ற வரசியாய் ராணியம்மை
பண்பறிந்த வாழ்க்கை படி.

10

நீதிக்குப் போராடு நீதிக்கட் சிக்கண்ணா
ஆதிநாள் தொட்டே யயராமல் - சோதனை
வந்தபோ தெல்லாம் வருந்தா தெதிர்த்துநின் று
பொன்றாப் புகழடைந்தார் பூ.

11

தமிழர் நலங்காக்கத் தள்ளா வயதில்
இமியுஞ்சோர் வில்லாநல் லேறாய்-நமையாளும்
ஈரோட்டு வேந்தன் இயக்கத்திற் சேர்ந்தவர்தாம்
பாராட்டச் செய்தார் பணி.

12

தந்தை பெரியார் தளபதியா யாக்கிடவே
சிந்தை மகிழ்ந்து சிரமேற்றார் - செந்தமிழர்
இன்ன லொழிந்தா ரெழுச்சி மிகக்கொண்டார்
பன்னலமும் பெற்றதிப் பார்.

13

போராட்ட வீரர் புகழ்மிக்க சான்ருேர்கள்
பாராட்டும் வீரர் பழியரசின் - கார்காட்டும்
வீரர் கடமையுணர் வீரர் கழகத்தின்
வீரர் தமக்குவீ ரர்.

14

தென்றல் தவழும் சிலுசி லெனவருவி
பொன்றூவிப் பாயும் புயலெழும் - குன்றத்தை
மண்ணேடு சாய்க்கின்ற மாப்புய லும்வீசும்
அண்ணுவின் பேச்சி லறி.

15

பலாச்சுளை மீது பறந்துவந் தீக்கள்
குலாவி அமர்வதுபோல் கொள்கை - நிலாவீசும்
வாய்மொழி சொற்கேட்டு வந்தனர் அண்ணு முன்
ஆய்கலை மாணவர்க ளாங்கு.

16

நாவலர் ச. சோ. பா. ரா. பி. சே. போரினிலே
நாவடங்கிச் செல்லநம் அண்ணுதாம் - பாவல்லான்
கம்பன் கவியெரிக்கக் காரணங்கள் மேடைசுட்டி
அம்புவிக்குச் சொன்ஞ ரறி.

17

வெண்தாடி வேந்தன் விழிகாட்ட வீரர்பலர்
பண்பாய்ப் படைதிரண்டு பாங்குவர - அண்ணாநம்
வேந்தர்க்கும் வீரர் தமக்கு மிடைநின்று
சேர்ந்தார்க்குச் செய்தார் சிறப்பு.

18

கம்ப ரசந்தந்தார் காமமிகு ரோமரச
மங்கை யரசாள் வணமுரைத்தார் - கங்கைதங்கு
ஆரிய மாயை யளித்தாரிந் நாட்டவரின்
சோர்வகற் றற்குத் துணிந்து.

19

தந்தை பெரியார் தடுத்தும் தமிழ்நாட்டு
முந்தைக் கவிஞர்க்கு முடிப்புப்பொன் - தந்து
புலவர் மரபு புகழ்பட வாழப்
பலவா யளித்தார் பரிசு.

20

கன்னித் தமிழ்காக்கக் காஞ்சிப் பதிதந்த
மன்னன்! மறத்தமிழன்! மாண்புடையன்! -
கன்னியர்க்குக்
காவலன்! காசு படைத்தோர்க்குக் காலனென்றும்
ஓய்விலன் ! ஒன்றுமஞ் சான்.

21

எத்தனை பட்டாளங் கூட்டிவட விந்திமொழி
எத்திக் கிருந்து நுழைந்திடினும் - முத்தமிழைக்
காக்கப் படைதிரட்டிக் காசினி யோர்மெச்சப்
போர்க்கோலம் பூண்டார் புகழ்.

22

இந்தி நுழைவெதிர்த்து ஏற்ற விலையெதிர்த்துப்
பன்முறை புக்கிருந்தார் பாழ்ஞ்சிறை-அங்குலைந்து
உள்ள முடைந்தோர்க் குரமூட்டி யன்னரின்
அல்லல் துடைத்தா ரணைத்து.

23

உரத்தநாட் டுச்சீதா வோர்முறை அண்ணு
கரம்பற்றிச் சென்றிளங் காளை - தரமுயர
முத்தமிழிற் பேசி முடித்தபின் பேராக
வைத்தார் வழிமறித்த நாடு.

24

தந்தை மணக்கத் தடுத்துநில் லாமையினல்
சிந்தை கலங்கிச்சின் னட்களிலே-பிந்திவந்த
தப்பி துணைகொண்டு தமிழ்நாட்டில் தி.மு.க.
நம்பி யமைத்தார் நயந்து.

25

“ஏரோட் டும் மக்களிங் கேங்கித் தவிக்குங்கால்
தேரோட்ட மேனுந் தியாகர்க்”கென்—ருேர்
முழக்கத்
தி. மு. க. போன்ற திருவளர் தம்பியரால்
தி. மு. க. நிற்குஞ் செழித்து.

26

மூலை முடுக்கரெலாம் மு. க. முயற்சியினுல்
வேலை நடக்க விறுவிறுப்பாய்—சேலைவென்ற
கண்ணாரும் காளையரும் கண்டதிற் சேர்ந்தார்கள்
நண்ணாரும் நாண நனி.

27

யாராலு மண்ணா எழிலறிஞ ரண்ணாவைப்
பார்முழு தும் ‘அண்ணா’ எனவழைக்கும் - சீராரும்
குடும்பப் பெயராய்க் குலவிவரல் கண்டு
நடுங்குவரே நள்ளார் நலிந்து.

28

ஆடு வதில்வல்லார் ஆட்டு வதில்வல்லார்
பாடு வதில்வல்லார் பாராட்டி—நாட்டுவதில்
வல்லார் நயங்காட்டு வாய்ப்பேச்சில் வல்லாரே
பொல்லார் புறங்கூறு வார்க்கு.

29

அருந்தமிழி லாங்கிலத்தி லாரும் வியக்கப்
பொருந்துஞ்சொற் பெயது புகன்று—மருங்
கிருக்கும்
மக்கள்வெள் ளத்தை மகிழ்ச்சிக் கடலாழ்த்தி
இக்கருந்தச் செய்வா ரிவர்.

30

சொல்லே ருழவர் துணைவனும் தொல்லுலகில்
நெல்லே ருழவர்க்கும் நேயனும்-பள்ளி
படிப்போர்க்கும் நண்பன் படியார்க் கரங்கில்
நடிப்போர்க்கும் நண்பனும் நம்பு.

31

ஐம்பதோ டேழி லரசுகட்டி லேறுதற்குத்
தம்பியரைச் சூழ்ந்து தடையின்றி-நம்பிவரும்
மக்களை யெண்ணி மதித்துச் சிராப்பள்ளி
பக்குவமாய் நட்டார் பதம்.

32

ஐம்பத்தே ழாண்டி லறுபத் திரண்டதனில்
ஐம்மூன்று மைம்பது மாமாறு-செம்மையாய்
ஆட்சிக் கெதிர்க்கட்சி யாக வமர்ந்துபணி
மாட்சியுறச் செய்தார் மகிழ்ந்து.

33

இந்திய நாட்டி னியல்பைக் கணிப்பதற்குச்
செம்மைநா டாண்மன்றத் தில்லியினில்-
முன்னமர்ந்தார்
மூக்கினிற் சுட்டுவிரல் சேர்க்க முழுவியப்
பாக்கி யுரைபகர்ந் தார்.

34

பட்டம் பலபெற்றோன் பட்டம்பெற் றோர்க்குநல்
திட்டங்க ளீயுந் திறலுடை யோன்-கட்டமின்றி
மக்க ளுயிர்வாழ மாநக ராட்சியினைச்
சிக்கெனப்பற் றிட்டான் சிறந்து.

35

பேராயக் கட்சியினைப் பேர்த்துச் சரித்திடவே
போராட்டக் கூட்டணி கூட்டினார்-பாராட்ட
நல்லாட்சி கண்டார் நடுங்காதே ஆட்சிசெய
வல்லார் கைகொடுத்தார் வந்து.

36

ஆரும் வியக்க வறுபத்தே ழாமாண்டில்
ஈர்பத்தாண் டாண்ட இருங்கட்சி-பார்வீழச்
செய்துகைப் பற்றினார் செந்தமி ழாட்சியிவர்
செய்கை வியக்குஞ் செகம்.

37

நாலைந் தகவை நகராதே ஆட்சிசெய்து
ஆல்போல் தழைத்த அரசாட்சி-வேலின்றி
மக்கட் படைகொண்டு மாய வழிசெயலால்
எக்களிப்புக் கொண்டா ரினிது.

38

படியில் பசிகாட்டி நின்றோர் பகிர்ந்து
படியரிசி யெய்தும் படிச்செய்வேம்-பிடிஅரிசி
என்றவுட னெல்லோரு மின்புற்று வாக்களித்தார்
மன்னனாய் வந்தார் மகிழ்ந்து.

39

'தம்பி யுடையான் படைக்கஞ்சான்" சாற்றுமொழி
நம்பமதி நாவலர் நன்னிதி-புந்திகோ
விந்தசாமி முத்துபாட் சாவோடு மாதவனைக்
கொண்டமைச்சுக் கூட்டினா ரால்.

40

கலைமாது காதலித்தாள் கண்டதன் பின்னோர்
அலைமா துவந்தணைத்தாள் அண்ணா -
சிலையேந்தும்
மாதவனைக் கொஞ்சுதலான் மாக்கட லாடைபூ
மாதவனைச் சேர்ந்தாள் மகிழ்ந்து.

41

மைய வரசை மதியான் மற்றுள
வைய வரசுக்கு வழிசொல்வான்-பையவே
காந்தி வழிநின்று கள்ளொழிக்கு வீரனெதிர்
நீந்துதலுஞ் செய்வா னிலத்து.

42

பாவையர்க் கன்பன் படித்துப்பல் பட்டமுறு
நாவலர்க்கு நண்பன் நலிவகற்றும் - காவலர்க்கும்
செல்வர்க்குந் தோழன் சிறுதம்பிக் கண்ணனும்
அல்லல் துடைக்குமண் ணு.

43

பச்சைத் தமிழரால் பச்சையப்பன் கல்லூரி
இச்சையுடன் தந்த இசைத்தமிழர்-விச்சைபல
கற்ற தமிழர் களிப்பூட்டும் நற்றமிழர்
குற்ற மிலாத்தமிழர் கூவு.

44

சென்னை நகரில் செகத்துத் தமிழர்களை
அன்னைத் தமிழாய்ந் தறிவிக்க-முன்னாள்
முடிவேந்த ராட்சியிலே முத்தமிழ்க்குச் செய்த
படிவிழாக் கண்டாரே பார்.

45

அண்ணா குறளன் அறிவுத் தமிழ்க்குறளன்
மண்ணாளும் வேந்தன் மணிமுடியில்-விண்ணணிடிக்கும்
மாடமிகு நாடுகட்கும் மாண்புகாட் டுங்குரலன்
கோடிக் கொருவனெனக் கூறு.

46

இராசகோ பாலரோ டேரோட்டு வேந்தர்
இருகை பிடித்தழைத்துச் செல்லச் -சிறுவனென
அண்ணா அவரின் அடிச்சுவடு பற்றியே
பின்னடந்து செல்வார் பெயர்ந்து.

47

நாவலர் தந்தையொடு நன் மு. க. ராசாசி
காவலான் ம.பொ.சி. ஆதித்தன்-சோர்வின்றி
மண்ணோக்கித் தாங்க வளர்விழுதா மாதலினால்
அண்ணாவோ ரால மரம்.

48

குடிசையில் தீப்பற்றக் கூடியழு வோரின்
நடுச்சென்று நம்பிக்கை யூட்டி-கெடுதியின்றி
வரிசையாய் வீடுகள் வாகாகக் கட்டி
பரிசாகத் தந்தார் பலர்க்கு.

49

சிந்தனைச் சிற்பி சிறியோரும் வீறுகொளத்
தந்தனைத்துச் செல்லுந் தளபதி-செந்தமிழர்
நலங்காக்கும் வேந்தன் நமதுயர்வு காட்ட
உலகமுஞ் சுற்று முவந்து.

50

ஏல்பல் கலைக்கழகம் ஏந்தல்நம் அண்ணாவின்
நூலறிவு மண்ணறிவு நுண்ணறிவு - பால்கண்டு
அளித்தது காண் பட்டம் அனைத்துலகுங் கண்டு
களித்துவக்கக் கண்டாய் களி.

51

ஆசியாக் கண்டத் தருந்தொழில்கள் மிக்குவுள்ள
வீசுபுகழ் நிப்பான் விருந்தளிக்க-மாசகத்துக்
கொண்டார் பெரும்புகழைக் கொண்டுவந்தார்
பல்லறிவு
விண்பறந்து வந்தார் விரைந்து.

52

பன்னாள் பிரிந்த பசுவினைப் பான்மறவாக்
கன்றெதிர்ந்து காண்பதுபோல் கண்டார்கள்-
தென்னாட்டார்
கார்கண்டுவக்கும் மயில்போல் களித்திட்டார்
பார்போற்றும் அண்ணாவைப் பார்த்து.

53

மக்க ளிலையென்று மாநிலத்தார் செப்பிடினும்
மக்களாய்க் கொண்டார் மனிதர்களைத்-
திக்கெட்டும
தமிழ்நாட்டுச் சீரைத் தலமுழுதுஞ் சுற்றி
அமிழ்தாகத் தந்தா ரவர்.

54

அண்ணாவைக் கைவிட்டுச் சம்பத் தகன்றாலும்
மண்ணுள்ளார் மற்றுப் பிரிந்தாலும்-அன்னார்
அறிவு பெருமை அரும்பொறுமை ஆற்றல்
செறிவுகுன் றாவெனச் செப்பு.

55

கடமையொடு கண்ணியம் கட்டுப்பாடு மூன்றும்
மடமகற்றும் நன்மா மருந்து-திடமுடன்
அண்ணா வளித்தா ரவைபற்றி நின்றோரிம்
மண்ணணி லுயர்வர் மதி.

56

இருமொழியே போதுமிந் நாட்டிற்கு வேறு
சிறுமொழி தேவையிலை யென்று-பெருஞ்சபையில்
இந்தி மறுத்தே யெதிர்த்தொரு தீர்மானம்
கொண்டுநிறை வேற்றினா கூவு.

57

"அண்ணா துரையென்னும் அண்ணல் தமிழ்நாட்டு
வண்ணான் அழுக்கெடுப்பில் வாய்மொழியில்-
பண்ணாவன்
சிற்பனெழுத் தோவியத்தில் செவ்வரசு நாவாயின்
அற்புதஞ்சூழ் மாலுமியென் றாடு."

58

தென்றல் திரு. வி. க. செப்பிய நன்மொழி
உண்மையுரை யாயிற் றுணர்ந்தோம்-
அண்ணாவைப்
பற்றி யுரைத்த பலருரையு முண்மையாய்
நிற்குமென் றேநீ நினை.

59

அறுவைச் சிகிச்சைக் கமெரிக்கா சென்ற
மறுவில்நம் அண்ணா விரைவில்-தரையுளோர்
உள்ளம் மகிழ உடல்நலம் பெற்றுய்தல்
எல்லோர்தம் இன்ப விழைவு.

60

மணிவிழாக் கண்டுபின் மாண்பண்ணா சீர்பல்
அணிவிழாக் கண்ட தன் மேலே-பிணியற்று
நூறாண்டு வாழ நுவலுவன் நல்வாழ்த்து
நீர்சூழ் நிலவுலகு நின்று.